## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
## திருவாய்மொழி - நான்காம் பத்து
**(நியமிக்கும் நாரணனிடம் கைங்கர்யபலமான இதரவிஷய விரக்தியைப் பெறுதல்)**

## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
## திருவாய்மொழி 4-1 - ஒரு நாயகம்[1]
**('ஐஸ்வர்யம் அற்பமாய் நிலையற்றதாய் இருப்பது, ஆத்மானுபவம் தாழ்ந்தது, பகவதனுபவமே தலை சிறந்தது' என்று பிறர்க்கு உபதேசித்தல்)**

3007 * ஒரு நாயகமாய் * ஓட உலகுடன் ஆண்டவர் *
கருநாய் கவர்ந்த காலர் * சிதைகிய பானையர் **
பெருநாடு காண * இம்மையிலே பிச்சை தாம் கொள்வர் *
திருநாரணன் தாள் * காலம் பெறச் சிந்தித்துய்ம்மினோ 1

3008 உய்ம்மின் திறை கொணர்ந்து * என்று உலகாண்டவர் * இம்மையே
தம்மின் சுவை மடவாரைப் * பிறர் கொள்ளத் தாம் விட்டு **
வெம்மினொளி வெயில் * கானகம் போய்க்குமைதின்பர்கள் *
செம்மின் முடித் திருமாலை * விரைந்தடி சேர்மினோ 2

3009 அடி சேர் முடியினராகி * அரசர்கள் தாம் தொழ *
இடி சேர் முரசங்கள் * முற்றத்தியம்ப இருந்தவர் **
பொடி சேர் துகளாய்ப் போவர்கள் * ஆதலில் நொக்கென *
கடி சேர் துழாய் முடிக் * கண்ணன் கழல்கள் நினைமினோ 3

3010 நினைப்பான் புகில் * கடல் எக்கலின் நுண்மணலின் பலர் *
எனைத்தோருகங்களும் * இவ்வுலகாண்டு கழிந்தவர் **
மனைப்பால் மருங்கற * மாய்தலல்லால் மற்றுக் கண்டிலம் *
பனைத் தாள் மத களிறட்டவன் * பாதம் பணிமினோ 4

3011 பணிமின் திருவருள் என்னும் * அம்சீதப் பைம்பூம் பள்ளி *
அணி மென்குழலார் * இன்பக் கலவி அமுதுண்டார் **
துணி முன்பு நாலப் * பல்லேழையர் தாம் இழிப்பச் செல்வர் *
மணி மின்னு மேனி * நம் மாயவன் பேர் சொல்லி வாழ்மினோ 5

3012 வாழ்ந்தார்கள் வாழ்ந்தது * மாமழை மொக்குளின்[2] மாய்ந்து மாய்ந்து *
ஆழ்ந்தார் என்றல்லால் * அன்று முதல் இன்றறுதியா **
வாழ்ந்தார்கள் வாழ்ந்தே நிற்பர் * என்பதில்லை நிற்குறில் *
ஆழ்ந்தார் கடற் பள்ளி * அண்ணல் அடியவர் ஆமினோ 6

---
[1] இது சில தேசங்களில் கோவில் திருவாய்மொழி
[2] மொக்கலின்

3013 ஆமின் சுவையவை * ஆறொடடிசில் உண்டார்ந்த பின் *
தூமென் மொழி மடவார் இரக்கப் * பின்னும் துற்றுவார் **
ஈமின் எமக்கொரு துற்றென்று * இடறுவர் ஆதலின் *
கோமின் துழாய் முடி * ஆதியஞ் சோதி குணங்களே 7

3014 குணங்கொள் நிறை புகழ் மன்னர் * கொடைக் கடன் பூண்டிருந்து *
இணங்கி உலகுடனாக்கிலும் * ஆங்கவனை இல்லார் **
மணங்கொண்ட போகத்து மன்னியும் * மீள்வர்கள் மீள்வில்லை *
பணங்கொள் அரவணையான் * திரு நாமம் படிமினோ 8

3015 படிமன்னு பல்கலன் பற்றோடறுத்து * ஐம்புலன் வென்று *
செடிமன்னு காயம் செற்றார்களும் * ஆங்கவனை இல்லார் **
குடிமன்னு மின்சுவர்க்கம் எய்தியும் * மீள்வர்கள் மீள்வில்லை *
கொடிமன்னு புள்ளுடை * அண்ணல் கழல்கள் குறுகுமினோ 9

3016 குறுக மிக உணர்வத்தொடு நோக்கி * எல்லாம் விட்ட *
இறுகல் இறப்பென்னும் * ஞானிக்கும் அப்பயன் இல்லையேல் **
சிறுக நினைவதோர் பாசம் உண்டாம் * பின்னும் வீடில்லை *
மறுகலில் ஈசனைப் பற்றி * விடாவிடில் வீடஃதே 10

3017 * அஃதே உய்யப் புகுமாறென்று * கண்ணன் கழல்கள் மேல் *
கொய் பூம் பொழில் சூழ் * குருகூர்ச் சடகோபன் குற்றேவல்[3] **
செய் கோலத்தாயிரம் * சீர்த் தொடைப் பாடல் இவை பத்தும் *
அஃகாமல் கற்பவர் * ஆழ்துயர் போய் உய்யற் பாலரே 11

**அடிவரவு:** ஒரு உய்ம்மின் அடி நினைப்பான் பணிமின் வாழ் ஆமின்
குணங்கொள் படி குறுக அஃதே பாலன்

[3] கொய் பூம் பொழில் குருகூர்ச் சடகோபன் குற்றேவல்கள்